**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண்.128/16 and 179/2016** **நாள். 31.08.2021**

2021ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31ம் நாள் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சூரியா (எ) ஜெயசந்திரன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வாசு | சாதி | |
| கிராமம் | செல்லபிராட்டை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 22 |

**ம.சா.2**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில் 2-ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 2 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. ம.த.சா.1- செஞ்சி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு சான்றிட்ட நகல்.

2. ம.த.சா.2- முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட புறநோயாளி பதிவு சீட்டு மற்றும் ஸ்கேன் ரிபோர்ட் அசல்.

3. ம.த.சா.3- விழுப்புரம் கோட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான சான்றிதழ் அசல்.

4. ம.த.சா.4- பாண்டிசேரி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான சான்றிதழ்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் செல்லபிராட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். 12.02.2016 ம் தேதி காலை 9.00 மணிக்கு செஞ்சி சேத்பட் ரோட்டில் கன்னலம் கிராமத்தில் விபத்து நடந்தது. விபத்து நடக்கும் போது எனக்கு 18 வயதாகும். சுரேஷ் என்பவரின் இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடையில் வேலை பார்க்கிறேன். எனக்கு ஒரு நாளைக்கு ரூ.500 சம்பளம் ஆகும். என் ஓனரை விசாரிக்க தயராக உள்ளேன். நான் டி.என் 19 எ 5783 என்ற வாகனத்தில் நான் கார்த்தி ,சிவகுமார் ஆகியோர் சென்றோம். மேற்படி வாகனம் கார்த்தி என்பவரின் நண்பருக்கு சொந்தமானது. வாகனத்தை கார்த்தி ஓட்டி சென்றார். கார்த்தி என்பவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று எனக்கு தெரியாது. இருசக்கர மோட்டார் வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்யகூடாது என்ற விவரம் எனக்கு தெரியும். செல்லபிராட்டை யிலிருந்து மேல்மலையனூர் செல்லும் போது கன்னலம் என்ற இடத்தில உள்ள திருப்பத்தில் கட்டுப்படுத்த இயலாமல் பாறையில் மோதி கீழே விழுந்தோம். வாகனத்தை ஓட்டிய கார்த்தி என்பவர் போதையில் இருந்ததால் வாகனத்தை வேகமாக ஓட்டி கட்டுப்படுத்த இயலாமல் பாறையில் மோதிவிட்டார் என்றால் கார்த்தி போதையில் இல்லை வேகமாக சென்றார். விபத்தில் எனக்கு எலும்பு முறிவு ஏதுவும் ஏற்படவில்லை. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. 108 ஆம்புலன்ஸ் மூலமாக செஞ்சி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அதன்பிறகு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அதன் பிறகு பாண்டிசேரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். தனியார் மருத்துவமனையில் ரூ.50,000/- கடன் வாங்கி சிகிச்சைபெற்றதற்கான மருத்துவ பீல்கள் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை. 2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை விவரங்கள் எனக்கு தெரியாது. கார்த்தி என்பவர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் குடி போதையில் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்று ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் அக்ட் 1 பாலிசி எடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதன் மூலம் 3 ம் தரப்பினருக்கு மட்டும் தான் இழப்பீடு வழுங்க இயலும் என்றாலும் நாங்கள் 3 ம் தரப்பினர் இல்லை என்பதால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழுங்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட வானத்தில் நாங்கள் அனுமதிக்கப்படாத நபர்கள் என்பதால் இழப்பீடு பெறதக்கவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு 1ம் மனுதாரர் தான் தரவேண்டும் என்றாலும் 2 ம் எதிர்மனுதாரர் தரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்பதால் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.